தமிழ் Mirror
www.tamilmirror.lk
TUESDAY, APRIL 18, 2023
செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 18, 2023 | ஒளி: 08 கதிர்: 251 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## 9 கைதிகள் ஓட்டம்; 2 பேர் சிக்கினர்

பதுளை, தல்தெண பகுதியிலுள்ள திறந்த வெளி புனர்வாழ்வு மையத்தில் இருந்து தப்பிச் சென்ற 09 கைதிகளில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைதிகள் திங்கட்கிழமை (17) அதிகாலை தப்பிச்சென்றுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.


ஏனையோரை தேடும் பணிகளில் பொலிஸாருடன் இணைந்து செயற்படுவதாக சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சுப் பதவி விவகாரம்:

# ராஜிதவுக்கு வழங்கினால் ரோஹிதவுக்கும் வேண்டும்

### ஜனாதிபதியிடம் மொட்டு விசேட கோரிக்கை





ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு அமைச்சுப் பதவி வழங்கினால், அதே மாவட்ட எம்பியான ரோஹித அபேகுணவர்தனவுக்கும் அமைச்சுப் பதவி வழங்குமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விசேட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுப் பதவியை விரைவில் ஏற்பதற்கு ராஜித சேனாரத்ன எம்.பி தயாராக இருப்பதாக கடந்த வாரங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

தொடர்ச்சி P2

# கார் விபத்தில் ஆஸி.பிரஜை பலி

■ நவி



கம்பளையில் இருந்து ஹெம்மாதகம வழியாக மாவனெல்லை நோக்கிச் சென்ற கார் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில், காரில் பயணித்த வெளிநாட்டு பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மகளும் காயமடைந்துள்ளதாக ஹெம்மாதகம பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் கார் சாரதியும் காயமடைந்த நிலையில், காயமடைந்த இருவரும் கம்பளை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வெளிநாட்டு பெண் கம்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 68 வயதுடைய பிரகாஷ் சரிதா தேவி என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2



இலங்கைக்கு வழங்கிய

## கடன் செலுத்தும் காலத்தை நீடித்தது பங்களாதேஷ்

இலங்கை தம்மிடம் வாங்கிய 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுக்கான கடன் திருப்பிச் செலுத்தும் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்துள்ளதாக பங்களாதேஷ் தெரிவித்துள்ளது.

இலங்கை மேலும் ஆறு மாதங்களை கோருவதாகவும் 2023 ஒகஸ்ட் மாதத்திற்குள் அதன் முதல் தவணையையும் செப்டெம்பர் மாதத்துக்குள் மற்றொரு தவணையையும் செலுத்துவதாகக் கூறியதாகவும் பங்களாதேஷ் வங்கியின் ஆளுநர் அப்துர் ரூஃப் தாலுக்டர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கில் ஏப்ரல் 25 அன்று

# கதவடைப்புக்கு கட்சிகள் அழைப்பு

■ **பௌத்தமயமாக்கலுக்கு எதிராகவும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிராகவும் போராட அழைப்பு**

■ எஸ். நிதர்ஷன்

பௌத்தமயமாக்கலுக்கு எதிராகவும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு எதிராகவும் ஏப்ரல் 25ஆம் திகதி வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் முழுமையான கதவடைப்பு போராட்டத்தை நடத்த தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

தமிழ் கட்சிகளுக்கிடையில் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டிலுள்ள,

தொடர்ச்சி P2




## கோட்டாபய தளத்தின் புலனாய்வாளர் சடலமாக மீட்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கோட்டாபய கடற்படைத்தளத்தில் பணியாற்றிவந்த கடற்படை வீரர் ஒருவர் கோட்டாபய கடற்படைத்தளத்தில் அவரது படுக்கையறையில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பதுளையைச் சேர்ந்த டபிள்யூ.எம்.எல்.பி வணசிங்க என்ற குறித்த கடற்படை வீரர் கோட்டாபய கடற்படைத்தளத்தில் புலனாய்வாளராக பணியாற்றி வந்துள்ளார்.

தொடர்ச்சி P2

பல்வேறு இன மற்றும் மத சமூகங்களை இணைப்பதில்

## சுதந்திர இலங்கை தோற்றுவிட்டது

### 75 வயதில் தோல்வியுற்ற நாடு என்கிறார் சந்திரிகா



ஐக்கிய பன்மைத்துவ அரசை உருவாக்குவதற்காக பல்வேறு இன மற்றும் மத சமூகங்களை ஒன்றாக இணைப்பதற்கு சுதந்திர இலங்கை தோல்வியடைந்ததாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற போது பொறாமைப்படக்கூடிய சமூகக் குறிகாட்டிகளைக் கொண்டிருந்த போதிலும்,

தொடர்ச்சி P2

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியிலும் அஞ்சலி

■ சண்முகம் தவசீலன்



தியாக தீபம் அன்னை பூபதியின் 35 ஆவது நினைவு தினம் தமிழர் தாயகம் எங்கும் உணவுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் வேளையில், அவரின் நினைவு தினத்தை முன்னிட்டு இடம்பெறும் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனி முல்லைத்தீவு நகரை அடைந்து, முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியிலும் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன்பின்னர் அந்த ஊர்தி திருகோணமலை நோக்கி பயணமாகியது.

அன்னை பூபதியின் 35 ஆவது நினைவுதினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அன்னை பூபதியின் உருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனி, நல்லூரில் அமைந்துள்ள 'தியாகதீபம்' திலீபனின் நினைவிட முன்றலில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (16) மதியம் 01 மணிக்கு மட்டக்களப்பு நோக்கி ஆரம்பமானது.

தொடர்ச்சி P2

அரசாங்கம் தீர்வு காணாததால்

## தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்த தீர்மானம்

தமது பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வுகாணத் தவறியமையால், தமது நடவடிக்கையை தீவிரப்படுத்த உள்ளதாக, தொழில் வல்லுநர்கள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உரிய நேரத்தில் கலந்துரையாடுவதற்கு தொழிற்சங்கங்கள் கூடும் என்று அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் டொக்டர் சமில் ஜயசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, பல்கலைக்கழக ஆசிரியர்கள், திங்கட்கிழமை (17) முதல் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் எனினும், க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பிடும் பணியில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஈடுபட மாட்டார்கள் என்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



தமிழ் எம்.பிகளின்

## அரங்கத்துக்கு விக்கி ஆதரவு

'பாராளுமன்ற தமிழ் அரங்கம்' என்ற முன்மொழிவுக்கு, தமிழ் மக்கள் கூட்டணி செயலாளரும் முன்னாள் வட மாகாண முதலமைச்சருமான சி. வீ. விக்னேஸ்வரன் எம்பி தனது ஆதரவை தெரிவித்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

விக்னேஸ்வரன் எம்.பி, மின்னஞ்சல் மூலம் தன்னிடம் ஆதரவை தெரிவித்துள்ளதாக மனோ குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி தமிழீழ விடுதலை இயக்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகள் தமது அதிகாரபூர்வ ஆதரவை,

தொடர்ச்சி P2

## ரூ.350 கோடி பெறுமதியான ஹெரோய்ன் கைப்பற்றல்

தென் பகுதி கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட 175 கிலோ கிராம் ஹெரோய்ன், 350 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியானது என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவினரின் தகவலின் அடிப்படையில் இலங்கை கடற்படை மற்றும் இலங்கை கடலோரக் காவல்படை இணைந்து ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்கொண்டனர்.

ஹம்பாந்தோட்டையில் இருந்து 132 கடல் மைல் தொலைவில் நீண்ட நாள் மீன்பிடி படகொன்றில் இருந்து சுமார் 179 கிலோ 654 கிராம் (பொதிகள் உட்பட) ஹெரோய்ன் மீட்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## அதிக வெப்பம் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை



நிலவும் அதிக வெப்பமான வானிலை காரணமாக முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வெடுக்குமாறும் அதிக நீரைப் பருகுமாறும் பொது மக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

மக்கள் வெப்பப் பிடிப்புகளால் பாதிக்கப்படலாம் என்றும் சோர்வு மற்றும் வெப்பம் அல்லது வெயிலில் தொடர்ந்து செயற்படுவது வெப்ப பக்கவாதத்துக்கு வழிவகுக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## 1 இலட்சம் குரங்குகள் சீனா செல்லாது

### 500 – 1000 வழங்கப்படும் என்கிறார் அமரவீர

சீனாவுக்கு 1 இலட்சம் டோக் மக்காக் குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படும் என்ற கூற்றை நிராகரித்த விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, 500 முதல் 1,000 வரையான குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படும் என்று தெரிவித்தார்.

திங்கட்கிழமை (17) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையின் டோக் குரங்குகளுக்கு சீனா கோரிக்கை விடுத்துள்ளதாகவும் சர்வதேச தரத்துக்கு ஏற்ப, நாட்டில் குரங்குகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கில்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ராஜிதவுக்கு வழங்கினால் ரோஹிதவுக்கும் வேண்டும்



இந்நிலையில், ரோஹித எம்.பி, பொதுஜன பெரமுன கட்சியின் வளர்ச்சிக்காக அதிக அர்ப்பணிப்புகளை மேற்கொண்டவர் என்றும் ராஜிதவுக்கு அமைச்சுப் பதவி வழங்கினால் அது பாரிய அநீதி என்றும் ஜனாதிபதியிடம் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ரோஹிதவுக்கு அமைச்சுப் பதவி வழங்காமல் ராஜிதவுக்கு அமைச்சுப் பதவி வழங்க வேண்டாம் என்று ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சுப் பதவிகளுக்காக ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெயர் பட்டியலில் ரோஹித அபேகுணவர்தனவின் பெயரும் முன்மொழியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கார் விபத்தில் ஆஸி.பிரஜை பலி

சாரதியால் காரின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி பாறையில் மோதியுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை ஹெம்மாத்தகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# கடன் செலுத்தும் காலத்தை நீடித்தது பங்களாதேஷ்

தனது கடன் நெருக்கடியை சரிசெய்வதற்காக இலங்கை தொடர்ந்து போராடி வரும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் 2023 வசந்த கால கூட்ட தொடரில் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பி நந்தலால் வீரசிங்கவுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்கள் குழுவிடம் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கு மேலும் நீட்டிப்பு தேவையில்லை என்று இலங்கை ஆளுநர் உறுதி செய்துள்ளார் என்று குறிப்பிட்ட அவர், கடனை திருப்பிச் செலுத்தும் காலம் நீட்டிக்கப்படும் போது, அது இலவசம் அல்ல என்றும் அது அதிக வட்டி சேர்க்கிறது என்றும் குறிப்பிட்டார்.

200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுக்கான முதல் தவணையை 2023 மார்ச் மாதத்துக்குள் வழங்க பங்களாதேஷிடம் இலங்கை மத்திய வங்கி கால அவகாசம் கோரியிருந்தபோதும் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கதவடைப்புக்கு கட்சிகள் அழைப்பு

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் இல்லத்தில் திங்கட்கிழமை(17) நடந்த கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

எதிர்வரும் 25ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள நிலையில், அன்றைய தினத்தில் வடக்கு, கிழக்கு தழுவிய கதவடைப்பை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், திங்கட்கிழமை(17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்,ஜனநாயக போராளிகள் கட்சியினர், தமிழ் தேசிய கட்சியினர் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# கோட்டாபய தளத்தின் புலனாய்வாளர் சடலமாக மீட்பு

இவர், சனிக்கிழமை (15) இரவு நித்திரைக்குச் சென்ற நிலையில், ஞாயிற்றுக்கிழமை (16) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவரின் சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் திங்கட்கிழமை (17) பிரேத பரிசோதனைக்காக உட்படுத்தப்பட்டபோது குறித்த வீரர் மாரடைப்பு காணமாக உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

சடலத்தின் மீதான பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்க--ப்பட்டுள்ளது சம்பவம் குறித்து முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர்

# தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்த தீர்மானம்

அரசாங்கத்தின் வரி விதிப்புக்கு எதிராக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், அனைத்து அரச பல்கலைக்கழகங்களிலும் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருந்தது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளன உறுப்பினர்களின் வேலைநிறுத்தம் காரணமாக 2022ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணியும் தாமதமாகியமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர இலங்கை தோற்றுவிட்டது

75 வயதில் இலங்கை ஒரு தோல்வியுற்ற நாடாகவே உள்ளது என்றும் குறிப்பிட்டார்

தெற்காசியா அறக்கட்டளை மற்றும் சென்னை ஆசிய இதழியல் கல்லூரி இணைந்து நடத்திய இணைய வழி நிகழ்வின் போதே அவர் இந்த கருத்துக்களை தெரிவித்ததாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காலனித்துவ ஆட்சியாளர்களால் 450 வருடங்கள் அழிவுக்குள்ளான பின்னரும், சுதந்திரத்தின் போது, இலங்கை சிறந்த சமூக-பொருளாதார குறிகாட்டிகளில் சிலவற்றைக் கொண்டிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

எனினும், 75 ஆவது ஆண்டில் இலங்கை ஒரு தோல்வியடைந்த நாடாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டிய அவர், 75 ஆண்டுகள் என்பது ஒரு தேசம் கணிசமான முன்னேற்றத்தை அடைய எடுக்கும் நீண்ட காலமாகும் என்றார்.

ஒவ்வொரு மட்டத்திலும் பரவலான ஊழல், இலங்கை அரசியலின் நற்செய்தியாக மாறியுள்ளதாகவும், நீதித்துறை, பொலிஸ் மற்றும் பொது சேவை உட்பட ஜனநாயக நிர்வாகத்தின் முக்கிய தூண்களை கீழிறக்கியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில், நீதித்துறை, பொலிஸ் மற்றும் பொதுச் சேவை உட்பட ஜனநாயக நிர்வாகத்தின் முக்கிய தூண்களில் பரவலான ஊழல் ஊடுருவியதாகவும் சுட்டிக்காட்டினார்.

சிறுபான்மையினரின் பிரச்சினைக்கான நியாயமான தீர்வு, அனைத்து குடிமக்களுக்கும் சம உரிமைகள் மற்றும் சிறுபான்மையினருடன் அரசியல் அதிகாரப் பகிர்வு முறையை உறுதிப்படுத்த கடந்த 75 ஆண்டுகளாக தவறிவிட்டோம் என்று குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷக்களை குற்றம் சாட்டிய அதேவேளை, ஊழல் மற்றும் முறையான தேசத்தை கட்டியெழுப்புவதில் இலங்கையின் தோல்வியே தற்போதைய நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும் என்றார்.

# அதிக வெப்பம் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை

வெளிப்புறங்களில் வேலைசெய்வோர் தமது கடினமான செயல்பாடுகளை கட்டுப்படுத்தி நிழலில் ஓய்வு எடுக்குமாறும் அதிக நீரைப் பருகுமாறும் அறிவிறுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், அநுராதபுரம், குருநாகல், மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிக வெப்பம் நிலவும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, பொலன்னறுவை, மாத்தளை, புத்தளம், கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா, பதுளை, அம்பாறை, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களும் எச்சரிக்கை பிரதேசங்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.



# அரங்கத்துக்கு விக்கி ஆதரவு

**“ தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர்கள் மற்றும் பங்காளி கட்சி தலைவர்களான பழனி திகாம்பரம் எம்பி, வே. இராதாகிருஷ்ணன் எம்பி ஆகியோரின் உடன்பாட்டுடன் இந்த அழைப்பை விடுப்பதாக ஏப்ரல் மாத ஆரம்பத்தில் மனோ கணேசன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது**

தமிழ் முற்போக்கு கூட்டணியின் கட்சிகளுக்கு மேலதிகமாக தெரிவித்துள்ளன.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் ஒன்றை பாராளுமன்றத்தில் அமைத்திடும் யோசனையை முன்னிறுத்தி தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தமிழ் எம்.பிக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ விடுதலை இயக்க தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் த. சித்தார்த்தன் எம்.பி, தமிழ் மக்கள் கூட்டணி செயலாளர் நாயகம் சீ. வி. விக்கினேஸ்வரன் எம்.பி ஆகியோருக்கு மின்னஞ்சல் கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர்கள் மற்றும் பங்காளி கட்சி தலைவர்களான பழனி திகாம்பரம் எம்பி, வே. இராதாகிருஷ்ணன் எம்பி ஆகியோரின் உடன்பாட்டுடன் இந்த அழைப்பை விடுப்பதாக ஏப்ரல் மாத ஆரம்பத்தில் மனோ கணேசன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரூ.350 கோடி பெறுமதியான ஹெரோய்ன் கைப்பற்றல்

இலங்கை கடலோரக் காவல்படையின் ‘சமுத்திரரக்ஷா’ என்ற கப்பலினால் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின் விளைவாக ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திங்கட்கிழமை (17) காலை, போதைப்பொருள் தொகுதி மற்றும் சந்தேகநபர்கள் காலி துறைமுகத்துக்குகு கொண்டு வரப்பட்ட நிலையில், அவற்றை பரிசோதிப்பதற்காக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா அங்கு விஜயம் செய்திருந்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நகுலுகமுவ, குடாவெல்ல, நெடோல்பிட்டிய மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25 முதல் 32 வயதுக்குட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

# முள்ளிவாய்க்கால்...

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் நகரை ஞாயிற்றுக்கிழமை (16) இரவு வந்தடைந்தது

இந்த ஊர்திப் பவனியின் இரண்டாவது நாள் பயணம் மாங்குளம் நகரில் இருந்து நேற்று(17) காலை ஆரம்பமாகியிருந்தது இதனை தொடர்ந்து 1990 ஆண்டு மாங்குளம் படைமுகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த கரும்புலி மாவீரர் லெப்.கேணல் போர்க்கின் நினைவு தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனை தொடந்து கனகராயன்குளம் ,புளியங் குளம்,நெடுங்கேணி,தண்ணீ ரூற்று,முல்லைத்தீவு ஊடாக முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி வளாகத்தை வந்தடைந்து அங்கு இனப்படுகொலை யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தி வட்டுவாகல் பாலத்தின் ஊடாக முல்லைத்தீவு நகரை வந்தடைந்து அங்கிருந்து அளம்பில் செம்மலை மணலாறு ஊடாக திருகோணமலை நோக்கி பயணமாகியுள்ளது.



# 1 இலட்சம் குரங்குகள் சீனா செல்லாது

டோக் குரங்குகளை ஏற்றுமதி செய்ய தீர்மானித்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

மூன்று சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ள நிலையில், ஏற்றுமதிக்கான அனுமதியைப் பெறுவதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் தயாரிக்கப்படும் என்றார்.

சீனாவுக்கு டோக் குரங்குகள் வழங்கப்படுமா, இல்லையா என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சகங்களின் அதிகாரிகளைக் கொண்ட குழு தீர்மானிக்கும் என்றும் குரங்குகளை ஏற்றுமதி செய்வது பல மாதங்களாக விரிவான ஆய்வுக்கு பின் எடுக்கப்பட்ட தீர்மானம் என்றும் அமைச்சர் கூறினார்.

சில சுற்றுச்சூழல் அமைப்புகள் இலங்கையின் வனப்பரப்பை அதிகரிப்பதற்கும், ஏனைய நிலங்களை டோக் மக்காக் குரங்குகளுக்காக ஒதுக்குவதற்கும் முன்மொழிந்துள்ளதாகவும், இது நடைமுறையில் சாத்தியமற்றது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இலங்கையில் இருந்து சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் டோக் மக்காக் குரங்குகள் ஆய்வக சோதனைக்கு பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகள் அண்மையில், கூட்டாக அறிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கருத்து தெரிவித்துள்ள சுற்றுச் சூழல் நீதிமைய நிர்வாகப் பணிப்பாளர் ஹேமந்த விதானகே 100,000 குரங்குகளில் முதல் தொகுதி குரங்குகள் சீனாவின் ஆய்வுகூடங்களுக்குச் செல்லலாம் என்றார்.

ஒப்பனைப் பொருட்களுக்கான பரிசோதனைகளுக்கும் மருத்துவப் பரிசோதனைகளுக்கும் பயன்படுத்தப்படலாம் என்றார்.

‘தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாப்போம்’

# அடையாள உண்ணாநோன்பு போராட்டம்

■ நிதர்சன் வினோத்

‘தமிழர் மரபுரிமைகளைப் பாதுகாப்போம்’ என்ற தொனிப்பொருளில் மேற்கொள்ளப்பட்ட அடையாள உண்ணாநோன்புப் போராட்டம், பழரசம் வழங்கப்பட்டு முடித்து வைக்கப்பட்டது.

குறித்த அடையாள உண்ணாநோன்புப் போராட்டமும் கையெழுத்துப் போராட்டமும், ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்பாக நேற்று முன்தினம் (16) காலை 9 மணியளவில் ஆரம்பமாகி, 3.30 மணியளவில் பழரசம் வழங்கப்பட்டு உண்ணாநோன்பு முடித்து வைக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம், பாராளுமன்ற உறுப்பினர்களான க.வி விக்னேஸ்வரன், சி. சிறிதரன்,



த. சித்தார்த்தன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான மாவை. சேனாதிராஜா, சுரேஷ் பிரேமசந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், அகில இலங்கை சைவ மகா சபை, தமிழ்ச் சைவப் பேரவை, சமய அமைப்புகளின் பிரதிநிதிகள், கிறிஸ்தவ மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட இந்த அடையாள உண்ணா நோன்புப் போராட்டத்தில், அழிக்கப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள்நிர்மாணம் செய்யப்பட வேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய வர்த்தமானி இரத்து நடைமுறையில் செயற்படுத்தப்பட வேண்டும்.

இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

மட்டு. மயிலத்தனைமடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புகள் சகலதும் நிறுத்தப்பட்டு, தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.

போருக்கு பிந்திய இன மதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பாரிய குடியேற்றம் உள்ளிட்ட செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் ஆகிய பிரதான கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குருக்கள்மடம் – அம்பிளாந்துறை ஓடத்துறை

# “படகுப் பாதைக்கு கட்டணம் செலுத்த முடியாது”

## ஆசிரியர்கள் கவலை

■ வ. சக்தி

மட்டக்களப்பு மாவட்டம், குருக்கள்மடம் - அம்பிளாந்துறை ஓடத்துறையில் சேவையில் ஈடுபடும் படகுப் பாதையில் கட்டணம் செலுத்தி தாம் பயணிக்க முடியாது என தெரிவித்ததை அடுத்து, திங்கட்கிழமை (17) குறித்த பாதைப் போக்குவரத்து மூன்று மணித்தியாலம் குருக்கள்மடம் துறையில் தடைப்பட்டிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது; பாடசாலையின் புதிய தவணைக்கான ஆரம்ப நாளான நேற்று (17), குறித்த படகுப் பாதை ஊடாக போக்குவரத்துச் செய்யும் அதிகளவு அதிபர், ஆசிரியர்களும் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகஸ்தர்களும், காலை ஏழு மணிக்கு பாதை புறப்படும் துறைக்குச் சென்று, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாதையில் வழமைபோல் ஏறியுள்ளனர்.

அங்கிருந்த வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகஸ்தர்கள், பற்றுச் சீட்டுகளைக் கொடுத்து, கட்டணம் செலுத்துமாறு தெரிவித்ததை அடுத்து அங்கு குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.



தாம் இதுவரை காலமும் இப்படகுப் பாதையூடாக எதுவித கட்டணங்களும் இன்றியே பயணம் செய்து வருகின்றோம்; கட்டணம் வசூலிப்பதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்ததையடுத்து, குறித்த பாதை சேவையில் ஈடுபடாமல் காலை ஒன்பது மணிவரையில் தடைப்பட்டிருந்தது.

பின்னர் அங்கிருந்த அரச உத்தியோகஸ்தர்கள் தம்மால் கட்டணம் செலுத்தி இப்பாதையில் பணயம் செய்ய முடியாது எனத் தெரிவித்து, கடமைக்குச் செல்லாமல் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

“சுமார் ஐந்து வருடங்கள் அதிகஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றினால் அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல முடியும். ஆனாலும் 10 வருடங்கள் கழிந்த நிலையிலும் அப்பகுதி மாணவர்களின் நலன்கருதி, இதுவரையில் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்காமல் சேவை செய்து வருகின்றோம். இந்நிலையில் நாம் பயணிக்கும் படகுப் பாதைக்கும் கட்டணம் அறவீடு செய்தால், அருகிலுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்ல நேரிடும். எனவே இதுவரை காலமும் இருந்ததுபோல் எதுவித கட்டணங்களுமின்றி நாம் பயணம் செய்து, எமது சேவையைத் தொடர்வதற்கு சம்மந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும்” என இதன்போது ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

# 13ஐ தாண்டிச் செல்ல முடியாமல் இருப்பதே நமது அரசியல் யதார்த்தம்

## திருகோணமலை கருத்தரங்கில் அரசியல் ஆய்வாளர் யதீந்திரா

■ அ. அச்சுதன்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழுள்ள மாகாண சபை முறைமைதான் தமிழ் மக்களுக்கு இருக்கும் ஒரேயொரு சாதகமான விடயமாகும். இதைத் தாண்டிச் செல்லப்போவதாக பலர் கூறினாலும் கூட, 2009இற்கு பின்னரான கடந்த 13 வருடங்களாக எந்தவோர் அரசியல் கட்சியும் அதை நிரூபிக்கவில்லை. இந்தப் பின்புலத்தில் இதிலுள்ள ஒரேயொரு வாய்ப்பான பக்கம், இந்தியா இதனை தொடர்ந்தும் வலியுறுத்திவருவதுதான்.



இந்தியாவின் ஆதரவு ஒன்றுதான் நமக்கு சாதகமான விடயமாகும். இதனை தமிழ் அரசியல் தலைமைகளும் மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்று ‘13ஆவது திருத்தச்சட்டத்தை விளங்கிக்கொள்வோம்’ என்னும் தலைப்பில், சனிக்கிழமை (15) நடைபெற்ற கருத்தரங்கின் போது, அரசியல் ஆய்வாளர் யதீந்திரா மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

திருகோணமலை செயலரங்கத்தின் (அக்ட்) ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரான, அ. வரதராஜப்பெருமாளின் செயலாளராக இருந்தவரான கலாநிதி. விக்கினேஸ்வரன், 13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள சாதகமான அம்சங்கள் பற்றி விரிவான உரையொன்றை ஆற்றியிருந்தார்.



# செல்வச்சந்நிதி கோவிலுக்கு அருகில் கிறிஸ்தவ சபை கட்டடம்

■ நிதர்சன் வினோத்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலுக்கு அண்மையில், கிறிஸ்தவ சபை ஒன்றால் அமைக்கப்படும் கட்டடம் தொடர்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கடந்த ஒரு வருடத்துக்கும் முன்பாக மேற்படி கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்ட போதே செல்வச்சந்நிதி ஆலய நிர்வாகம், அந்தப் பிரதேசத்தில் வாழும் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் குழப்பமின்றி வாழ்வதற்கு, அந்த இடத்தில் கட்டடத்தை அமைப்பதைத் தடுக்குமாறு, கோப்பாய் பிரதேச செயலாளரிடம் எழுத்துமூலம் கேட்டிருந்தது.

அத்துடன், வலி. கிழக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்திலும், மதத்தைப் பரப்பும் நோக்கத்துடன் கட்டடம் அமைக்கப்படுவதாகவும் அதுதொடர்பில் சபை முறையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என்றும் பிரதேச சபை உறுப்பினர் இ. ஐங்கரன் கேட்டிருந்தார்.

குறித்த கட்டடம் அமைக்கும் பணி நிறைவு பெற்று வரும் இந்நிலையில், எந்தவொரு தரப்பினரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று செல்வச்சந்நிதி நிர்வாகம் விசனத்தை வெளியிட்டுள்ளது.



## அரசு-ஆட்சி- அதிகாரம் நூல் வெளியீடு

அருட்பணி லூக் ஜோன் எழுதிய அரசு – ஆட்சி – அதிகாரம் நூல் வெளியீடு, சனிக்கிழமை (15) கிளிநொச்சி, கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில், அருட்தந்தை தேவகுணாநந்தன் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆசியுரையை தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி பத்மதயாளனும் நூல் அறிமுக உரையை கலாநிதி ரி.எஸ் யோசுவாவும் நூல் ஆய்வை பேராசிரியர் கேரி கணேசலிங்கம், அருட்தந்தை எம். யூட்சுதர்சன் ஆகியோரும் நிகழ்த்தினார்கள். நூலின் முதற்பிரதியை பேராசிரியர் ஏ.சி தவரஞ்சித் பெற்றுக்கொண்டார்.

சூழமைவு சார் புதிய ஏற்பாட்டு பின்னணியில் தற்போதைய இலங்கை அரசியலையும் இனத்துக்குள் நடக்கும் அடிப்படைவாதங்கள், ஒடுக்குமுறைகள் தொடர்பில் ஒப்பிட்டு ஆய்வு செய்து எழுதப்பட்ட நூலாக அரசு – ஆட்சி – அதிகாரம் நூல் வெளிவந்துள்ளது.

மு. தமிழ்ச்செல்வன்

# பூநகரி – சங்குப்பிட்டி கரையோரம் படையினரால் துப்புரவு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பூநகரி - சங்குப்பிட்டி பாலத்தை அண்மித்த கடற்கரையோரப் பகுதிகளைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் படையினரால் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் 52 ஆவது படைப்பிரிவின் 523 ஆவது காலாட் பிரிகேடின் 11 ஆவது களப் பொறியியல் படையினரால், இவ்வாறு தூய்மைப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.



# அடித்த பாம்பு கடித்து மாற்றுத்திறனாளி உயிரிழப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, கிழவன் குளம் பகுதியில் பாம்பு கடிக்கு இலக்காகிய ஐந்து பிள்ளைகளின் தந்தையான மாற்றுத்திறனாளி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

மாங்குளம் பிரதேசத்துக்கு உட்பட்ட கிழவன்குளம் பகுதியில், வியாழக்கிழமை (13) இரவு அடித்துவிட்டு, குற்றுயிராய் கிடந்த பாம்பைக் கையால் தூக்கியபோது, பாம்பு கடிக்கு இலக்காகிய நபர், உடனடியாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில்



ஞாயிற்றுக்கிழமை (16) இரவு உயிரிழந்துள்ளார்.

மாங்குளம் கிழவன் குளத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளியான பாலசுந்தரம் ஜெகதீஸ்வரன் (வயது-47)என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

**“ அடித்துவிட்டு, குற்றுயிராய் கிடந்த பாம்பைக் கையால் தூக்கியபோது, பாம்பு கடிக்கு இலக்காகிய 47 வயது நபர் உயிரிழந்துள்ளார்**





பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான

# SLRCS இன் வதிவிட நிகழ்ச்சி

இலங்கையில் மனிதாபிமான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்கின்ற பாரிய அமைப்பான இலங்கை செஞ்சிலுவை சங்கமானது (SLRCS) பேராதனைப் பல்கலைக்கழக (UoP) விவசாய பீட இளங்கலை பட்டதாரி மாணவர்களுக்கான இரண்டு நாள் வதிவிட நிகழ்ச்சித் திட்டமொன்றை கல்கமுவையில் நடத்தியது.

இப் பயிற்சிப் பட்டறையானது இலங்கை செஞ்சிலுவை சங்கம் குருணாகல் கிளையினால் செயற்படுத்தப்பட்டதுடன், இது சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் சம்மேளனம் ((IFRC), சர்வதேச செஞ்சிலுவை சங்கம் (ICRC) மற்றும் Empress Shoken நிதியத்தின் நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் நிலத்தடி நீர் மறுசீரமைப்பு அனர்த்த முன்னாயத்த செயற்றிட்டம் ஆகியவற்றின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டதுடன் இது ஓர் அறிவு மற்றும் அனுபவப் பகிர்வு களப் பயணமாக அமைந்தது.

இந் நிகழ்வானது இலங்கை செஞ்சிலுவை சங்கம் குருணாகல் கிளையின் பயிற்சி நிலைய மண்டபத்தில் இலங்கை செஞ்சிலுவை சங்கம், காலநிலை மாற்றத்துக்கு இசைவாக்கமடைதல் (CCA), அனர்த்த இடர் குறைப்பு (DRR) மற்றும் நிலத்தடி நீர் மறுசீரமைப்பு அனர்த்த முன்னாயத்த செயற்திட்டம் பற்றிய அறிமுகத்துடன் ஆரம்பமானது. ஆரம்பகட்ட கலந்துரையாடலில் விவசாய பொறியியல், மண் மற்றும் விவசாயம் மற்றும் விஞ்ஞான அடிப்படையில் மாணவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். இதன்போது, மாணவர்கள் தகவல்களை சேகரிக்கவும், அவற்றை அவர்களது குழுக்களுக்கு வெளிப்படுத்தவும் பயிற்சிப் பட்டறையின் இறுதியில் தாங்கள் கண்டறிந்தவற்றை சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டனர்.

கல்கமுவ களப் பயணத்தின் போது மாணவர்கள் கிராம மக்கள் மற்றும் பயனாளிகளுடன் கலந்துரையாடி CCA, DDR உடன் இணைத்து நிலத்தடி நீர் மறுசீரமைப்பு பற்றிய விழிப்புணர்வினை வழங்கினர். இதன் போது, SLRCS வளவாளர்கள் அம்மாணவர்களுடன் விழிப்புணர்வினை வழங்குவதற்கு உறுதுணையாக நின்றனர். இதன் போது மாணவர்கள், அவர்கள் எதிர்பார்த்ததை விடவும் அதிகமாகக் கற்று மகிழ்ந்தனர். முன்னர் கூறியதைப் போன்று, மாணவர்கள் தாங்கள் கண்டறிந்தவற்றை நிகழ்த்துகை, வீடியோ மற்றும் கலந்துரையாடல் மூலங்களை உபயோகித்து கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவகத்தில் (ITI) மிகுந்த ஆர்வத்துடன் நிகழ்த்துகை செய்தனர். இதன் போது, மாணவர்களின் தகவல் தொடர்பு மற்றும் பகுப்பாய்வு திறன்கள் என்பன அவர்களது ஆய்வறிக்கையின் அடிப்படையில் SLRCS வளவாளர்கள் மற்றும் ஊழியர்களினால் பெரிதும் பாராட்டப்பட்டது.

நிலத்தடி நீர் மறுசீரமைப்பு அனர்த்த முன்னாயத்த செயற்திட்டத்தின் கீழ் இஹல பளுகடவை பிரதேசத்தில் 65 வீட்டுத்தோட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இவற்றுள் 42 வீட்டுத்தோட்டங்களின் செயற்பாடுகள் மிகவும் வினைத்திறனாக இடம்பெற்று வருகின்றன. மேலும் நிலத்தடி நீர் மறுசீரமைப்பு செயற்றிட்டத்தின் வெற்றியினையும் நிலத்தடி நீர் மறுசீரமைப்பு தொழில்நுட்பத்தின் சாத்தியத் தன்மையினையும் மதிப்பீடு செய்வதற்கும் இவ் வீட்டுத்தோட்ட செயற்றிட்டத்தினை பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. மக்கள் மனங்களில் நேர்மறையான சிந்தனை மற்றும் மண்ணின் ஈரப்பதன் அதிகரிப்பு என்பன இச் செயற்றிட்டத்தின் மூலம் வலுவாகப் பிரதிபலிக்கின்றது. மேலும், தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுத் தட்டுப்பாடு பிரச்சினைகளைக் குறைப்பதிலும் இச் செயற்றிட்டமானது மறைமுகமாக செல்வாக்குச் செலுத்துகின்றது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் குருநாகல் கிளையின் கிளை நிறைவேற்று அதிகாரி சரத் விக்ரமசிங்க கூறும் பொழுது, “பேராதனை பல்கலைக்கழக விவவாய பீட மாணவர்களுடன் இணைந்து இச் செயற்றிட்டத்தில் பணியாற்றுவது மகிழ்ச்சியளிக்கிறது. எனது குழுவானது இச் செயற்றிட்டத்தினூடாக மக்களுக்கு சிறந்த சூழலை உருவாக்குவதற்காக அயராது உழைத்துள்ளது. இச் செயற்றிட்டத்தின் முக்கிய

> **“குழி வெட்டும், வடிகாலமைக்கும் பணிகளும் நிறைவுசெய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து பீலிகளும் குழாய்களும் பொருத்தப்பட்டன. வீட்டுத் தோட்டங்கள் மற்றும் நீரேந்து பகுதிகளை அபிவிருத்தியடையச் செய்வதன் மூலம் மேற்குறித்த வழி முறைகளில் நிலத்தடி நீரை மீள் நிரப்ப முடியுமென இச் செயற்றிட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, ஒவ்வொரு பயனாளியும் பெறுகின்ற நிலத்தடி நீர் மறுசீரமைப்பு அலகின் வகையானது இடம், அளவு, நிலப் பயன்பாடு என்பனவற்றின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகின்றது**

குறிக்கோள்களில் ஒன்றாக விழிப்புணர்வு மற்றும் ஆளுமையை வளர்த்தல் என்பன காணப்படுவதுடன் மாணவர்களுடனான இடைத் தொடர்பு குறித்த செயற்றிட்டமானது சிறந்த கரங்களில் கிடைக்கப் பெற்றுள்ளது என்பதனை உறுதி செய்ய முடிகின்றது. ஏனெனில், அவர்களே இக் குறிப்பிட்ட துறையின் எதிர்காலத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றனர். மேலும், இலங்கை மக்களின் செழிப்பான வாழ்விற்காக எதிர்காலத்தில் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்”.

விழிப்புணர்வு மற்றும் ஆளுமையை வளர்த்தல், நிலத்தடி நீர் மறுசீரமைப்பு அனர்த்த முன்னாயத்த செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோளொன்றாகக் காணப்படுகின்றது. இக் குறிக்கோளை அடைவதற்காக இது தொடர்பாக அக்கறையுடைய தரப்பினருக்கு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நிலத்தடி நீர் மறுசீரமைப்பின் அவசியம் பற்றிய அறிவையும் பார்வையையும் மேம்படுத்தும் வகையில் இத் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. இச் செயற்றிட்டத்தின் இலக்குக் குழுவானது சமூகம், பாடசாலை மற்றும் பல்கலைகழகம் என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டனர். இதில் ஒவ்வொரு மட்டத்துக்குமான நிகழ்ச்சிகள் பொருத்தமான வளவாளர்களையும் முறைமைகளையும் பயன்படுத்தி நடைபெற்றன.

இது தொடர்பில் பேராதனை பல்கழைக்கழக இறுதி வருட மாணவி சுனிமாலி அத்தநாயக்க கூறுகையில், “இந்த இடங்களை பார்வையிட்ட பிறகு தான் கிராமப் பகுதிகளில் நிலத்தடி நீரின் தேவையை உணர்ந்தோம். SLRCS இன் அறிவு மற்றும் அனுபவப் பகிர்வு செயற்றிட்டத்தின் விளைவாக, இவ்வாறான இடங்களுக்குச் சென்று, இத்தகைய செயற்றிட்டங்களின் விளைவுகளையும், மக்கள் வாழ்வில் அதன் வெற்றியையும் நாமே கண்டறியும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. இவ்வாறானதொரு வாய்ப்புக்காக SLRCS ஐ பாராட்டுவதோடு மேலும் எதிர்காலத்தில் இது போன்ற பல செயற்றிட்டங்களுடன் வெற்றியைத் தொடரும் என நம்புகிறோம்”.

நிலத்தடி நீர் மறுசீரமைப்பு செயற்றிட்டத்தில் மழை நீர் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்துவதற்காக ஊடு வடியும் வழி, ஊடு வடியும் அகழிகள், தடுப்புகள், கசிவுகள், ஊடு வடியும் கிணறுகள் போன்ற நான்கு தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை (NWSDB) இந்த அணுகுமுறைகளைப் பரிந்துரை செய்துள்ளது. அது மட்டுமல்லாது, பிராந்தியத்துக்குப் பொறுப்பான விவசாயப் போதனாசிரியருக்கு அனைத்து கட்டுமான நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டு மேலும், அவர்கள் மூலம் விவசாயத் திணைக்களம் அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்கியது.

முதலில் குழி வெட்டும் பணிகளும் வடிகாலமைக்கும் பணிகளும் நிறைவுசெய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து பீலிகளும் குழாய்களும் பொருத்தப்பட்டன. வீட்டுத் தோட்டங்கள் மற்றும் நீரேந்து பகுதிகளை அபிவிருத்தியடையச் செய்வதன் மூலம் மேற்குறித்த வழி முறைகளில் நிலத்தடி நீரை மீள் நிரப்ப முடியுமென இச் செயற்றிட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக, ஒவ்வொரு பயனாளியும் பெறுகின்ற நிலத்தடி நீர் மறுசீரமைப்பு அலகின் வகையானது இடம், அளவு, நிலப் பயன்பாடு என்பனவற்றின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுகின்றது.

# “போதாமையால் போக முடியவில்லை”

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ



தமிழ்-சிங்கள புதுவருட புத்தாண்டு நிறைவடைந்த நிலையில், தாங்கள் கடமையாற்றிய இடங்களுக்குச் செல்வதற்காக பெருந்திரளான பயணிகள் ஹட்டன் நகர பஸ் நிலையத்துக்கு திங்கட்கிழமை (17) சமூகமளித்திருந்தனர்.

ஹட்டன், பொகவந்தலாவை, டிக்கோயா, புளியாவத்தை, மஸ்கெலியாக உள்ளிட்ட இடங்களிலும், அந்தந்த நகரங்களை அண்மித்த பெருந்தோட்டங்களைச் சேர்ந்தவர்களும் ஹட்டன் பஸ் தரிப்பிடத்துக்கு சமூகமளித்திருந்தனர்.

எனினும், தாங்கள் பயணிப்பதற்கு போதியளவில் பஸ்கள் இன்மையால் நீண்டநேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்று காத்திருந்த பயணிகள் தெரிவித்தனர்.

கொழும்பு உள்ளிட்ட வெளிமாவட்டங்களில் கடமையாற்றுவோரே, உரிய நேரத்தில் போதியளவில் பஸ்கள் கிடைக்காமையால் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்திருந்தனர். எனினும், கண்டி உள்ளிட்ட ஏனைய இடங்களுக்கு ஓரளவுக்கு பஸ்கள் இருந்தன. அந்த பஸ்களின் பயணிகளின் எண்ணிக்கை சற்று குறைவாகவே இந்தது.

இதுதொடர்பில் கருத்துரைத்த ஹட்டன் பஸ்தரிப்பிட நேரக்கணிப்பாளர் “ஹட்டன் டிப்போவில் இருந்து கொழும்புக்கு நாளொன்றுக்கு 22 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன” என்றார்.

# விளையாட்டு விழா

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ




தமிழ்-சிங்கள புதுவருடத்தையொட்டி ஹட்டன், குடாகம ஆர்ஹில் சுற்றுலா ஹோட்டலில் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில், ஹோட்டல் ஊழியர்களின் குடும்ப அங்கத்தவர்கள் மட்டுமன்றி, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் பங்கேற்றனர்.

இந்த விளையாட்டு விழா, ஹோட்டல் வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை (16) முழு நாளும் நடத்தப்பட்டது என்று ஹோட்டலின் பொது முகாமையாளர் அயந்த இந்திக தெரிவித்தார்.

இங்கு தேசிய கலாசாரத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன. போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டியவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட்டன என்றும் அயந்த இந்திக தெரிவித்தார்.

# உடரட்ட மெனிக்கேக்காக காத்திருந்த பயணிகள்

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ




புத்தாண்டுக்காக தங்களுடைய சொந்த இடங்களுக்கு சென்றிருந்தவர்கள், கொழும்பு உள்ளிட்ட இடங்களுக்கு மீண்டும் திரும்புவதற்கு போதியளவான பஸ்கள் இல்லாத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இதனால், ரயிலில் பயணம் செய்வதற்காக பெரும் எண்ணிக்கையிலான பயணிகள் ஹட்டன் ரயில் நிலையத்தில் காத்திருந்தனர்.

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டையை நோக்கி திங்கட்கிழமை பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலுக்காகவே இவர்கள் காத்திருந்தனர்.

# 40 வருடங்களுக்கு பின் சுத்தமான குடிநீர்

■ காமினி பண்டார இலங்கக்கோன்

கடந்த 40 வருடங்களாக சுத்தமான குடிநீர் இன்றி அவஸ்தைப்பட்ட 130 குடும்பங்களுக்கு, சுத்தமான குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

களனிவத்தை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் ஹட்டன், எபோட்ஸ்டிலி தோட்டத்துக்கே இவ்வாறு குடிநீர் வழங்கப்பட்டு உள்ளது.

மனித உரிமைக ளுக்கான சமாதானத் தூதுவர் யொஹான் பெரேராவின் தலையீட்டினால் சுமார் 1.5 மில்லியன் ரூபாய்



செலவில், குடிநீர் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# தியான மண்டபத்துக்கு ஞாயிறன்று அடிக்கல்


■ டி.ஷங்கீதன்


நுவரெலியா, சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம், எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், பிரதமர் தினேஸ் குணவர்தன் கலந்து கொள்ளவுள்ளார் என்று இவ்வாலயத்தின் அறங்காவலர் சபை தலைவரான வேலுசாமி இராதாகிருஸ்ணன் எம்.பி தெரிவித்தார்.

புதுடெல்லி ரொட்டரிக் கழக டெல்லி சிட்டி கழகத்தினரின் அனுசரணையுடன் இந்திய நாட்டைச் சேர்ந்த திருமதி அனுஸ்ரீ ஜெயின் குப்தா குடும்பத்தவர்களின் ஞாபகார்த்தமாக இந்தத் தியான மண்டபம் அமைக்கப்பட உள்ளது.

அன்று ஸ்ரீ சீதையம்மன் ஆலய வரலாற்றுச்சான்று முத்திரை வெளியீட்டு விழாவும் ஸ்ரீ சீதையம்மன் ஆலய தீர்த்தக்குளம் திறப்பு வைபவமும் நடைபெறும்.





# இறந்து மிதக்கும் ஆற்று மீன்கள்

■ பி.கேதீஸ்

கொத்மலை ஓயாவின் பிரதான கிளை ஆறான ஆக்ரா ஓயாவில் அதிகளவான மீன்கள் திடீரென உயிரிழந்து நேற்று (17) காலை மிதந்ததாக லிந்துல அக்கரகந்த பிரதேச தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

ஆக்ரா ஓயாவிலுள்ள நீர் மாசடைந்துள்ளதாகவும், பல்வேறு கால்வாய்களிலிருந்து வெளியேறும் அசுத்தமான நீர், ஆக்ரா ஓயாவில் சேர்வதாலும், மீன்கள் இறந்திருக்கலாமென அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், இறந்த மீன்களை சிலர் பிடித்து உணவுக்காக எடுத்துச் செல்வதையும் அவதானிக்க முடிந்தது. ஆக்ரா ஓயா மாதத்தில் ஒரு முறை கறுப்பு நிறத்தில் காணப்படுவதாக மலையக சுற்றாடல் சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.


# அப்பியாசக் கொப்பிகள் நாளை கையளிப்பு

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை இலவசமாக கையளிக்கும் நிகழ்வு நாளை (19) நடைபெறும்.

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாரம்பரத்தின் தலைமையில், ஹட்டன், கிருஷ்ணபவான் மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும்.

தேவையான அப்பியாசக் கொப்பிகள், இந்தியா, சென்னை நகரிலுள்ள விலங்கு வைத்திய பல்கலைக்கழகத்தின் அனுசரணையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் முன்னாள் தவிசாளர் அங்கமுத்து நந்தகுமார் தெரிவித்தார்.

ஹட்டன் கல்வி வலயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 21 பாடசாலைகளில் தரம் 2 முதல் 6 வரை கல்வி பயிலும் மாணவர்களுக்கே இலவசமாக இவை வழங்கப்படவுள்ளன என்றார்.



# கடமையேற்பு

ஹட்டன் பொலிஸ் பிரிவின் புதிய பொலிஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரி எச்.எம்.என் தெஹிகம, தன்னுடைய கடமைகளை வெள்ளிக்கிழமை (14) ஏற்றுக்கொண்டார். இந்த வைபவம் ஹட்டன் பொலிஸ் அதிகாரி காரியாலயத்தில் இடம்பெற்றது.

இவர், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியாக நீண்ட காலம் சேவையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அசட்டையாக இருக்க வேண்டாம்; அவதானமாக இருப்பதே புத்திசாலித்தனம்

அடைமழை பெய்யும் வரையிலும் காத்திருந்துவிட்டு, மழைநீர் தேங்கியதன் பின்னரே, அடைசல்களை நீக்கும் நடவடிக்கைகளில் பலரும் மும்முரமாக ஈடுபடுவர். அடைசல்களை முன்கூட்டியே எடுத்திருந்தால், வெள்ளநீர் தேவையில்லாமல் தேங்கி நிற்பதற்கு வாய்ப்பே இருக்காது; நுளம்புகள் பெருக்கத்துக்கும் அஞ்சத் தேவையில்லை.

மழைக்குப் பின்னர், டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களையும் மிகத் தீவிரமாக சுத்தம் செய்துகொண்டிருப்பர். பாடசாலைகளில் டெங்கொழிப்பு சிரமதானம் முன்னெடுக்கப்படுகின்றது. எனினும், டெங்கை பரப்பும் 'ஈடிஸ்' வகை நுளம்பானது, சகல வகையான பாத்திரங்கள் மற்றும் நீரைச் சேமிக்கும் இடங்கள்; ஏன், மிகக் குறைவாகவே தண்ணீர் இருப்பினும், தங்கள் இனப்பெருக்கத்தை செய்யும். இந்த 'ஈடீஸ்' வகையான நுளம்புகள், மனிதர்களை பகல் நேரத்தில்தான் கடிக்கும்.

ஆகையால், வரும்முன் காக்கும் வகையிலான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். யாராவது அறிவுறுத்த வேண்டுமெனக் காத்திருக்காமல், வீட்டுத்தோட்டங்கள், வளவுகளை வாரத்துக்கு வாரம் சுத்தம் செய்வது சிறந்தது.

இதற்கிடையே, நாட்டுக்குள் ஒருவகையான 'இன்புளுவென்ஸா' பரவிக்கொண்டிருக்கின்றது. ஆகையால், சனநெரிசல்மிக்க இடங்களுக்குச் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

டெங்கு, இன்புளுவன்ஸாவுக்கு அடுத்தப்படியாக, புதுவகையான கொரோனா வைரஸ் குறித்த அச்சம் உலகின் பல நாடுகளில் ஏற்பட்டுள்ளது. அதற்காக, முன்கூட்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நமது நாட்டைப் பொறுத்தவரையில் கடந்த அலைகளின் போது எவ்வளவு அசட்டையாக இருந்தார்களோ, அதைப்போன்றதோர் அசட்டையையே கடைப்பிடிக்கின்றனர்.

வைரஸ் காய்ச்சல்கள், இன்புளுவென்ஸா, டெங்கு உள்ளிட்டவை தங்களுக்கு ஒருமுறை தொற்றிக்கொண்டுவிட்டால், மீண்டும் தொற்றாதென நினைப்பது தவறாகும். அதேபோல, அசட்டையாகவும் இருந்துவிடக்கூடாது. கொரோனா தொன்றின் போது, மிகமிக கவனமாக சுயபாதுகாப்புடன் இருந்தவர்கள், இரண்டு அல்லது மூன்று தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டதன் பின்னர் முகக்கவசத்தை கழற்றிவீசிவிட்டு பொது இடங்களில் அலைந்துதிரிகின்றனர்.

இந்நிலையில்தான், கொரோனா வைரஸின் புதிய திரிபான 'அர்க்டரஸ்' பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இந்தத் திரிபால், கடந்த வெள்ளிக்கிழமை மாத்திரம் 11,109 புதிய கொரோனா தொற்றாளர்கள் இந்தியாவில் இனங்காணப்பட்டுள்ளனர். இந்தத் தொற்று இங்கிலாந்து, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்காவிலும் இனங்காணப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட நாடுகளுக்குச் சென்றவர்கள் நமது நாட்டுக்கும் வரக்கூடும். அவ்வாறனவர்களால் இந்தக் கொரோனா வைரஸ் கட்டாயமாக பரவும். முதலாவது கொரோனா அலையின் போது, சர்வதேசங்களுடன் தொடர்புகொண்டிருக்கும் விமான நிலையங்களை மூடியிருந்தால், இலங்கை தப்பித்திருக்குமென்ற கருத்தும் பலரிடம் இன்னும் காணப்படுகின்றது.

புதிய கொரோனா வைரஸ் நாட்டுக்குள் நுழைவதற்கு முன்னர், முன்கூட்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். அத்துடன், முகக்கவசம் அணிந்து, தங்களைத் தாங்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்; விழிப்பாகவும் இருக்கவேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம்.

## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# இயங்கு நிலையற்ற முஸ்லிம் எம்.பிக்கள்

**மொஹமட் பாதுஷா**

அரசியல் என்பது, எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பதை அடிப்படையாகக் கொண்ட ஒருவித கலையாகும். இது எல்லோருக்கும் வாய்த்துவிடாது.

கால மாற்றத்துக்கு ஏற்ப, தங்களை மாற்றிக் கொள்ளாத மனிதர்கள், உலக ஒழுங்கில் இருந்து புறமொதுக்கப்பட்டு விடுவதைப் போல, களநிலைமைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை எல்லாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, எல்லாக் காலத்திலும் காரியத்தில் கண்ணாயிருக்கின்ற அரசியல்வாதிகள்தான், மக்கள் மனங்களில் நிலைபெறுகின்றார்கள்.

இது அரசியலுக்கு மட்டுமன்றி எல்லா தொழிற்றுறைகளுக்கும் பொருந்தும். பல நூறு ஆசிரியர்கள் கற்பித்தாலும், எல்லா ஆசிரியர்களையும் மாணவர்கள் குருவாக மனதில் குடியமர்த்துவதில்லை. ஆயிரக்கணக்கான அரச அதிகாரிகள் பதவிக்கு வந்தாலும், அனைவருமே மக்கள் மனங்களில் நிலைத்திருப்பதில்லை. இது பொதுவானது; என்றாலும் மக்கள் பிரதிநிதிகள், இவர்களுள் சற்று விசேடமானவர்கள் எனலாம்!

மக்களின் வாக்குகளை நம்பி பிழைப்பு நடத்தும் ஒரு கூட்டமாக அவர்கள் இருப்பதால், அரசியலில் ஏற்படும் இலையுதிர்காலம், பனிக்காலம், புயற்காலம், வரட்சிக்காலம், கோடை மாரி என எல்லாப் பருவ காலங்களிலும் இயங்கக் கூடியவர்களாக, அவர்கள் தம்மை புடம்போட்டுக் கொள்ள வேண்டும்.

அரச அதிகாரிகள் விடுமுறை தினங்களில் ஓய்வாக விடுப்பில் இருப்பது மாதிரி அல்லது, பாடசாலை ஆசிரியர்கள் தவணை விடுமுறையில் தமது பணிகளை சற்று ஒதுக்கி பொழுதைக் கழிப்பது போல, அரசியல்வாதிகள் செயற்பட முடியாது. அப்படிச் செயற்படுபவர்கள் மேற்குறிப்பிட்ட 'இயங்குநிலை மக்கள் பிரதிகள்' என்ற வகுதிக்குள் உள்ளடங்கமாட்டார்கள்.

இந்த அடிப்படையில் நோக்கினால், முஸ்லிம் அரசியல்வாதிகள், அதாவது தலைவர்கள், அமைச்சர்கள், எம்.பிக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் இயங்குபவர்களாகவும் மீதமுள்ள அனைத்துக் காலத்திலும் சமூக விடயத்தில் வாழாவிருப்பவர்களாக அல்லது, தமது கஜானாக்களுக்காக உழைப்பவர்களாகவே இருக்கக் காண்கின்றோம்.

ரமழான் நோன்பு காலத்தில் அல்லது விடுமுறையில் இருக்கின்ற பாடசாலை மாணவர்கள் போன்று, பரபரப்பின்றி, வேலைப்பழு இன்றி, ஓய்வாக காலத்தைக் கழிக்கவே 99 சதவீதமான முஸ்லிம் எம்.பிக்கள் விரும்புவதாக தோன்றுகின்றது.

உலக அரசியல் ஒழுங்கு என்று ஒன்று இருக்கின்றது. குறிப்பாக 'ஒற்றை உலக ஒழுங்கு' (வன் வேர்ல்ட் ஓர்டர்) என்பது இதில் முக்கியமானது. அத்துடன், இந்த உலகை திரைக்குப் பின்னால் இருந்து யார் ஆட்டுவிக்கின்றார்கள் என்பதும் கவனிப்புக்கு உரியது. இந்த ஓர் உலக ஒழுங்கில் இப்போது, சில அதிர்வுகள் ஏற்படத் தொடங்கி இருக்கின்றன.

சமகாலத்தில், இலங்கை அரசியலும் பலவிதமான மாறுதல்களுக்கு உள்ளாகி வருகின்றது. வெளிப்படையாக பார்க்கின்ற போது, மைத்திரியும் மஹிந்தவும் ரணிலும் சஜித்தும் ஒரே விதமானவர்கள் என்று நாம் மேலோட்டமாக நினைத்தாலும், ஆழமாக நோக்குகின்ற போது ஆட்சி மாற்றங்களுக்குப் பின்னால் பெரும் சூட்சுமங்கள் இருப்பதை உணர முடியும்.

இலங்கையின் ஒழுங்கில் அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் அதிகமாகவும், ஏனைய சில நாடுகள், அமையங்கள் வரையறுக்கப்பட்ட அளவிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவர்களது அதிகாரப் போட்டியின் ஆடுகளமாக இலங்கை மாறியிருக்கின்றது. இது பொது மக்களிலும் உள்நாட்டு அரசியலிலும் தாக்கம் செலுத்துவதை காண முடிகின்றது.

இவ்வாறான சூழ்நிலைகளுக்கு மத்தியிலேயே முஸ்லிம் அரசியல்வாதிகள் தமது மக்களுக்கான அரசியலை முன்னகர்த்த வேண்டியுள்ளது. இன்னும் தெளிவாகச் சொன்னால், இந்தக் களநிலைமைகள் பற்றிய முழுமையான அறிவுடனேயே களமாட வேண்டியது கட்டாய நியதியாக உள்ளது.

இருப்பினும், முஸ்லிம் அரசியலின் யதார்த்தம் வேறு விதமாக இருப்பதைக் காண்கின்றோம். முஸ்லிம் எம்.பிக்கள் குறிப்பிட்ட சில பருவ காலங்களில் மாத்திரமே இயங்குகின்றனர். ஏனைய பெரும்பாலான காலங்களில் சமூகம் சார்ந்த விடயங்களில் சோம்பேறித்தனமாகவும் பொடுபோக்காகவும் செயற்படுவதைக் அவதானிக்க முடிகின்றது.

பாடசாலை மாணவர்கள் ஒரு பரீட்சைக்குப் பிறகான விடுமுறை காலத்தில் ஓய்வாகவும் உல்லாசமாகவும் பொழுதுகளை வீணே கடத்துவது இந்த இடத்தில் நினைவுக்கு வருகின்றது. ஏனெனில், முஸ்லிம் கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்,ன தேர்தலுக்குப் பின்னரான கால இடைவெளியில் அவ்விதமே தொழிற்படுகின்றனர்.

இந்த பாராளுமன்ற காலத்தில் மட்டுமன்றி, கடந்த ஆட்சிக்காலங்களிலும் எம்.பியாக பதவி வகித்தோர் தொடர்பில் இந்தப் போக்கை வெகுவாக அவதானிக்க முடிந்தது.

'சோடா போத்தலை திறந்தால் பீறிடுகின்ற பானத்தைப் போல' தேர்தல் மேடைகளிலும் மக்கள் கூடும் இடங்களிலும் உணர்ச்சி பொங்கப் பேசுகின்ற முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகள், அதைச் செயலில் காட்டுவதில்லை என்பது மிகக் கவலையான விடயமாகும்.

சிங்கள மக்களை மையமாகக் கொண்ட பெருந்தேசிய அரசியல், தன்பாட்டில் நகர்ந்து கொண்டே இருக்கின்றது. அதுதான் இந்த நாட்டின் தலைவிதியை தீர்மானிப்பதில் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

அதேவேளை, தமிழ்த் தேசிய அரசியலானது இந்த அரசியல் ஒழுங்குக்கு ஈடுகொடுத்து பயணித்து வருகிறது. குறிப்பாக, தேர்தல் காலமாக இருந்தாலும், பெருந்தொற்று காலமாக இருந்தாலும், அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக் காலமாக இருந்தாலும் பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகள், தமது காய்களை நகர்த்திக் கொண்டே இருக்கின்றார்கள்.

இதனால், தமிழர் அரசியல் இயங்குநிலையுடனும் ஒப்பீட்டளவில் உயிர்த்துடிப்புடன் இருக்கின்றது. இதன் விளைவாக, தமிழர்கள் பல விடயங்களை மெல்ல மெல்ல பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை கூர்ந்து நோக்கும்போது கண்டுகொள்ள முடியும்.

தமிழ்த் தேசிய அரசியல் வெளிப்படுத்திய பிம்பத்தின் அளவுக்கு, பெரிதாக எதையும் சாதிக்கவில்லை என்பது உண்மையாக இருப்பினும், தமிழர்களின் பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்படுவதுடன். அவர்களது அபிலாஷைகள் தொடர்ந்து வலியுறுத்தப்படுகின்றன. இதனால் இவ்விடயங்கள் தேசிய அரசியலில் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்துள்ளன.

இதுதான் இங்கு முக்கியமானது! முஸ்லிம்களுக்கான அரசியல் இவ்விதம் இயங்கவில்லை என்பதுதான் கவனிப்புக்கு உரியது. அதாவது, முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதெல்லாம் ஒருபுறமிருக்க, குறைந்தபட்சம் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, வகிபாகம், அவர்களது பிரச்சினைகள், அபிலாஷைகள், எதிர்பார்ப்புகள் பற்றிய விடயங்கள் அறுதியும் உறுதியுமாக காத்திரமான முறையில் முன்வைக்கப்படவில்லை.

ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழ்கின்ற முஸ்லிம் சமூகத்துக்கு இருக்கின்ற பிரச்சினைகள் என்ன, அதன் ஆழ அகலங்கள் என்ன என்பது பற்றி அறியாத, விளங்காத முஸ்லிம் எம்.பிக்களும் நம்மிடையே உள்ளனர்.

சமூக விடயத்தில் அக்கறை இல்லாத முஸ்லிம் பொதுஜனங்களைப் போல, சமூகத்தை விட சுயநலத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மக்கள் பிரதிநிதிகளும் உள்ளனர்.

இந்த இலட்சணத்தில் முஸ்லிம் சமூகத்தின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் எவை, காணி முரண்பாடுகள் என்ன, இனவிகிதாசார ரீதியான பாகுபாடுகள் என்ன, இனப்பிரச்சினை அல்லது வடக்கு-கிழக்கு இணைப்பு உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்களில் முஸ்லிம் சமூகத்தின் தெளிவான நிலைப்பாடு என்ன என்பதை, முஸ்லிம் அரசியல்வாதிகள் கூட்டாக வலியுறுத்தத் தவறி வருகின்றனர்.

இவை பற்றி முஸ்லிம் அரசியல்வாதிகள் வினைதிறனான முறையில் செயற்படுவது இல்லையென்றே கூற வேண்டும். ஆகக் கூடிய பட்சமாக, எப்போதாவது அத்திபூத்தாற்போல் ஏதாவது ஒரு பிரச்சினையை பேசுவார்கள்; வாக்குறுதி வழங்குவார்கள்; மக்களை நம்ப வைப்பார்கள்.

அநேகமாக அது ஒரு தேர்தல் காலமாக இருக்கும்; அல்லது, முஸ்லிம் சமூகத்தின் ஆதரவை திரட்டி எடுத்துக் கொண்டு, அரசாங்கங்கள் மற்றும் பெருந்தேசிய கட்சிகளுக்கு முட்டுக் கொடுக்க வேண்டிய ஒரு காலகட்டமாக இது இருக்கும். ஆனால், அத்தோடு எல்லாம் அடங்கி விடும்.

ஒரு வாகன சாரதி விபத்துகளை தவிர்த்து, இழப்புகளைக் குறைத்து தமது பயண இலக்கை அடைய வேண்டுமாயின், எப்போதும் புதுத்தெம்புடன் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். வாகனம் ஓடிக் கொண்டிருக்க அவர் நித்திரை கொள்ள முடியாது. வளைவு நெழிவுகள் ஏற்ற இறங்கங்களுக்கு ஏற்றாற்போல் வாகனத்தை இயக்கிக் கொண்டிருப்பதுதான் அவரது வேலை.

அதுபோல அரசியல்வாதிகளின் வேலை, எப்போதும் சமூகம் சார்பான விடயங்களுக்காக இயங்கிக் கொண்டிருப்பதாகும். இது சேவையோ அர்ப்பணிப்போ அல்ல. மாறாக, தமக்கு வாக்களித்த மக்களுக்கு செய்ய வேண்டிய பிரதியுபகாரம் ஆகும்.

தமக்கு கிடைக்கின்ற கௌரவம் எடுக்கின்ற சம்பளம், கொடுப்பனவு, வரப்பிரசாதங்களுக்காக செய்தே ஆக வேண்டிய வேலையாகும்.

கட்சி மாறுவது, பதவி பெறுவது, பணம் உழைப்பது, மக்களை ஏமாற்றுவது என்ற உத்திகளை எல்லாம் அக்குவேறு ஆணிவேறாக அறிந்து வைத்துள்ள முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்கள் தொடராக இயங்குநிலையில் இருப்பது என்ற அடிப்படை விடயத்தையும் கொஞ்சம் கற்றுக் கொள்ள வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

தன்னை உணர்தல் தனித்துவமானது. தன்னை உணர்வதே தைரியமூட்டும். ஒன்றுமே தெரியாமல் எங்ஙனம் உயர்ந்திட முடியும்?

தன்னை உணராதவர்களே பிறர் நிலைகளை ஆராய்கின்றனர். உன்னைக் காணாமல், உன்நிலை புரியாதுவிட்டால், உலகுடன் எப்படி இயங்கிட முடியும்?


சந்தேகங்களைக் கரைக்காமல், தொடர்ந்தும் கலங்கிய நிலையில் வாழ்வது கடினம். உன்னை நீ அறிந்த பின்னர், உலகத்துடன் நீ எப்படி வாழவேண்டும் எனப் புரிந்துகொள்ள முடிகின்றது. மனிதர்கள் யாவரும் ஒத்தகருத்து கொண்டவர்கள் அல்லர். ஒவ்வொருவரும் தாங்கள் செய்வதே சரி என்றே எண்ணுகின்றனர். இன்னும் சிலர், தமது பிழைகள் எதுவெனப் புரிந்தும், அதை மற்றவர்களுக்கு விட்டுக்கொடுக்காமல், வீணான விவாதங்களுக்கு அடிமையாகின்றனர். இது கேலிக்கூத்து! உண்மையானவற்றை ஒத்துக்கொண்டு, செய்த பிழைகளை உணர்ந்தால், அவர்கள், தவறுகளைக் கழுவ, ஆராய்ந்து விட்டார்கள் என்பதே பொருள்.

காலையில் விழித்து எழும்போது, மனத்தில் எவ்வித பாரமும் இன்றி, இயங்குபவன், நிம்மதியுடன் தன்னை உருவாக்கிய பாக்கியம் பெற்றவன் ஆகின்றான்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### சம்மாந்துறையில் யானைகள் அட்டகாசம்



அம்பாறை, சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள கிராமங்களில் தினமும் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுகின்றது. குறிப்பாக செந்நெல் கிராமம், உடங்கா, தென்னம்பிள்ளை கிராமம், கல்லரிச்சல், மலையடிக்கிராமம் உள்ளிட்ட வயல் வெளிகளை அண்டியுள்ள கிராமங்களில், தினமும் அதிகாலை வேளையில் உட்புகுந்து காட்டு யானைகள் மக்களின் குடியிருப்பு பிரதேசங்களையும் பயிர் நிலங்களையும் சேதப்படுத்தி வருகின்றன. இது தவிர மேட்டு நிலப்பயிர்கள், மரம், செடிகொடிகள் பலவற்றையும் யானைகள் சேதப்படுத்தி வருகின்றன. இரவு வேளைகளில் காட்டு யானைகள் இக்கிராமங்களில் நடமாடுவதால், பல்வேறான இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாக, இக்கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மையில், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிக்குள் உட்புகுந்த காட்டு யானை, மதில்களை உடைத்து நாசப்படுத்தியதுடன், கல்லூரியின் விவசாயப் பிரிவு மாணவர்களால் நாட்டப்பட்ட பயிர்களையும் சேதப்படுத்தியுள்ளன. சம்மாந்துறை பிரதேசத்தில் அண்மைக் காலத்தில், காட்டு யானைகளின் தாக்குதலால் நான்கு விவசாயிகள் உயிரிழந்திருந்த சோக சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எம்.சி அன்சார்

மும்பை

# அமித்ஷா கலந்து கொண்ட விழாவில் 13 பேர் உயிரிழப்பு

மராட்டிய அரசு சார்பில் 'மராட்டிய பூஷண் விருது' வழங்கும் விழா நேற்று முன்தினம் மும்பை கார்கரில் உள்ள மைதானத்தில் நடைபெற்றது.

குறித்த விழாவில் மத்திய உட்துறை அமைச்சர் அமித்ஷா, முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே, துணை முதலமைச்சர் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

சுமார் 306 ஏக்கர் பரப்பளவு கொண்ட பிரமாண்ட மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவில், இலட்சக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் இவ்விழாவினைக் காணச்சென்ற மக்கள் நீண்ட நேரமாக வெயிலில் அமர்ந்திருந்ததால் அவர்களில் பலரது உடல்நலம் பாதிக்கப்பட்டது.

இதனையடுத்து சுமார் 123 பேர் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக



அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்த 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

மேலும், 24 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என்றும் கூறப்படுகிறது.

இந்நிலையில் இது குறித்து முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே



கூறுகையில், இந்தச் சம்பவம் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும்" இவ்வாறு தெரிவித்தார்.

சென்னை

## பிறந்தநாளில் காதலனின் உயிரைப் பறித்த சிறுமி

சிறுமியொருவர் பிறந்தநாள் அன்று தன்னைச் சந்திக்க வந்த காதலனுக்கு, குளிர்பானத்தில் விஷம் கலந்து கொடுத்து கொலைசெய்த சம்பவம் சென்னையில் இடம்பெற்றுள்ளது.



பரமக்குடி அருகே உள்ள மஞ்சூர் கிராமத்தைச் சேர்ந்தவர் சஞ்சீவ் குமார். இவர் இன்ஸ்டாகிராம் மூலம் பழகிய 16 வயதான சிறுமியொருவரைக் காதலித்து வந்தார்.

திருப்பூரில் பணியாற்றிய சஞ்சீவ் குமார், தனது பிறந்தநாளைக் காதலியுடன் சேர்ந்து கொண்டாடுவதற்காக, சென்னைக்கு வந்துள்ளார்.

பின்னர் சென்னை வந்த அவர், காதலியுடன் ஊர் சுற்றிவிட்டு, ஊர் திரும்புவதற்காக கோயம்பேடு சென்றுள்ளார். அப்போது, காதலி விஷம் கலந்த குளிர்பானத்தை, சஞ்சீவ் குமாருக்கு கொடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனை அறிந்த சஞ்சீவ்குமார், உறவினர் உதவியுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இறப்பதற்கு முன், காதலி குளிர்பானத்தில் எலி மருந்து கலந்து கொடுத்துவிட்டதாகக் கூறி, சஞ்சீவ்குமார் மரண வாக்குமூலம் கொடுத்ததால், இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே, பிரேத பரிசோதனைக்குப் பிறகு, சஞ்சீவ்குமாரின் உடல் சொந்த ஊரான பரமக்குடியில் உள்ள மஞ்சூர் கிராமத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

உத்தர பிரதேசம்

## அத்திக் அகமதுவின் உடல் நல்லடக்கம்



உத்தரப்பிரதேசத்தில் மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட தாதா அத்திக் அகமது மற்றும் அவரது சகோதரரின் உடலங்கள் பலத்த பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றைய தினம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

60 வயதான அத்திக் அகமது, 1989 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை 5 முறை சட்டப்பேரவை உறுப்பினராகவும், ஒருமுறை எம்பியாகவும் (2004 முதல் 2009) பதவி வகித்துள்ளார்.

அவர் மீது சுமார் 101 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்நிலையில் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி அத்திக் அகமது மற்றும் அவரது சகோதரர் அஷ்ரப் அகமது, பிரயாக்ராஜ் பகுதியில் அமைந்துள்ள நேரு மருத்துவமனைக்கு மருத்துவ பரிசோதனைக்காகப் பொலிஸார் அழைத்து வந்திருந்தனர்.

இதன்போது அவர்களை செய்தியாளர்கள் சூழ்ந்திருந்த நிலையில் அங்கிருந்த மர்ம நபர்கள் அத்திக் அகமது மற்றும் அவரது சகோதரர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு பொலிஸாரிடம் சரணடைந்தனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து குறித்த நபர்களைக் கைது செய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அமெரிக்கா

## அமெரிக்காவுடன் கைகோர்த்த ஜப்பான், தென்கொரியா

அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் இணைந்து சர்வதேச கிழக்கு கடல் பரப்பில் முத்தரப்பு கூட்டு இராணுவ பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன.



கொரிய தீபகற்ப பகுதியில் வடகொரியா தொடர்ச்சியாக பல ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகின்றது.

குறிப்பாக கடந்த சில வாரங்களாக வடகொரியாவின் இராணுவ நடவடிக்கைகள், கொரிய பகுதியில் பதற்றம் அதிகரிக்கும் வகையில் அமைந்து உள்ளன.


இந்நிலையில் வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தல்களை தடுக்கவும், அதற்கு பதிலடி கொடுக்கவும் அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் இணைந்து சர்வதேச கிழக்குக் கடல் பரப்பில் முத்தரப்பு கூட்டு இராணுவ பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

## விவாகரத்து கேட்ட மனைவிக்கு காத்திருந்த அதிர்ச்சி

மொரோக்கோ கால்பந்து அணியைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரரான அசரப் தனது 19 வயதில் 31 வயதான ஸ்பானிஷ் நடிகையும் மொடலுமான ஹிபா அபோக்கை காதலித்து திருமணம் செய்தார்.

இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். தற்போது அசரப்பிற்கு 24 வயதாகின்றது. இந்நிலையில் அசரப் மீது அவரது மனைவி ஹிபா அபோக் விவாகரத்து கோரி மேல்முறையீடு செய்துள்ளார். மேலும், தனது கணவர் அசரப் ஹக்கிமியின் கோடிக்கணக்கான சொத்துகளில் பாதியை ஜீவனாம்சமாகவும் கேட்டுள்ளார்.

அசரப் ஹக்கிமியும் தனது மனைவியின் கோரிக்கையை



ஏற்றுக்கொண்டார். வேண்டுமானால் தன் சொத்து முழுவதையும் அவருக்கே கொடுப்பதாக கூறினார். ஆனால் அசரப் ஹக்கிமியின் பெயரில் உள்ள சொத்துகளின் மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டபோது நீதிமன்றம் அதிர்ச்சியடைந்தது.

பரீஸ் செயின்ட் ஜெர்மைன் மற்றும் ரியல் மாட்ரிட் போன்ற அணிகளுக்காக விளையாடிய அசரப் ஹக்கிமி, தனது தொழில் சாதனைகள், பிராண்ட் அம்பாசிடர்கள், ஸ்பான்சர்கள் மற்றும் பரிசுத் தொகை முழுவதையும் தனது தாயாருக்கு வழங்கியுள்ளார். மேலும் தான் வாங்கிய கட்டடங்கள், வீடுகள், மனைகள் அனைத்தையும் தாயார் பெயரில் பதிவு செய்துள்ளார்.

இதனால் அசரப் ஹக்கீமிடம் ஒரு சென்ட் நிலம், கார், சொந்த உடைகள் கூட இல்லை என்பது நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளது.

அசரப் தனது தாயார் பெயரில் வாங்கப்பட்ட சொத்துகளின் மதிப்பு 200 கோடி ரூபாயாகும்.



அயர்லாந்துக்கெதிரான முதலாவது டெஸ்டில்


# 591 ஓட்டங்களை பெற்ற இலங்கை

அயர்லாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 561 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இலங்கை இடைநிறுத்தியிருந்தது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை சார்பாக அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 179, குசல் மென்டிஸ் 140, சதீர சமரவிக்கிரம ஆட்டமிழக்காமல் 104, தினேஷ் சந்திமால் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், கேர்ட்டிஸ் கம்பர் 2, மார்க் அடைர், அன்டி மக்பிரயன், ஜோர்ஜ் டொக்ரல், பென் வைட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் ஆர்சனல் வெஸ்ட் ஹாம் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் சமப்படுத்தியது.

ஆர்சனல் சார்பாக, கப்ரியல் ஜெஸூஸ், மார்டின் ஒடெகார்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, வெஸ்ட் ஹாம் யுனைட்டெட் சார்பாக சைட் பென்ரஹ்மா, ஜரோட் பௌவன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 74 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் ஆர்சனல் உள்ளது. இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி 70 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், 59 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், 56 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நியூகாசில் யுனைட்டெட்டும் காணப்படுகின்றன.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## சமநிலையில் பார்சிலோனா கெட்டா:.பே போட்டி

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், கெட்டாபேயின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா சமப்படுத்தியது.

லா லிகா புள்ளிகள் பட்டியலில் 73 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பார்சிலோனா காணப்படுகின்றது. 62 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட்டும், 60 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் அத்லெட்டிகோ மட்றிட்டும், 51 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் றியல் சொஸைடட்டும் காணப்படுகின்றன.



## ஐ.பி.எல்: குஜராத்தை வென்ற ராஜஸ்தான்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), அஹமதாபாத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டன்ஸுடனான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட டைட்டான்ஸ், 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், டேவிட் மில்லர் 46 (30), ஷுப்மன் கில் 45 (34), அணித்தலைவர் ஹர்டிக் பாண்டியா 28 (19), அபினவ் மனோஹர் 27 (13) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், சந்தீப் ஷர்மா 4-0-25-2, அடம் ஸாம்பா 4-0-32-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 178 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய



றோயல்ஸ், 19.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. துடுப்பாட்டத்தில், அணித்தலைவர் சஞ்சு சாம்ஸன் 60 (32), ஷிம்ரோன் ஹெட்மயர் ஆட்டமிழக்காமல் 56 (26), துருவ் ஜுரேல் 18 (10), இரவிச்சந்திரன் அஷ்வின் 10 (03) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், மொஹமட் ஷமி 4-1-25-3, பாண்டியா 4-0-24-1, மோஹித் ஷர்மா 2-0-7-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஹெட்மயர் தெரிவானார்.

முன்னதாக மும்பையில் நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

கொல்கத்தா: 185/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: வெங்கடேஷ் ஐயர் 104 (51), அன்ட்ரே ரஸல் ஆ.இ 21 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹிருத்திக் ஷோகின் 2/34 [4], பியூஷ் சாவ்லா 1/19 [4])

மும்பை: 186/5 (17.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: இஷன் கிஷன் 58 (25), சூரியகுமார் யாதவ் 43 (25), திலக் வர்மா 30 (25), டிம் டேவிட் ஆ.இ 24 (13), றோஹித் ஷர்மா 20 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுயஷ் ஷர்மா 2/27 [4])

போட்டியின் நாயகன்: வெங்கடேஷ் ஐயர்

இந்நிலையில், ஹைதரபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை மும்பை எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 18 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.